# பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி

நாமக்கல் மாவட்டம்

ந.க.எண்.204/2010 நாள். 22 06. 2010

## இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2010–2011

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சியில் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2010-2011ன் கீழ் பின்வரும் வேலைகளை செய்வதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பொத்தனூர் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 06.07.2010ந் தேதி செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பொத்தனூர் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 06.07.2010ந் தேதி செவ்வாய் கிழமை அன்று பிற்பகல் 3.30 மணி அளவில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால், வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 05.07.2010ம் தேதி திங்கள் கிழமை மாலை 5.00 மணி வரை அதற்குரிய தொகையை இணைப்பில் கண்டுள்ள பட்டியலின்படி தொகை செலுத்தி (விற்பனை வரி உட்பட) பெற்றுக் கொள்ளலாம்.

மேற்காணும் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது. ஒப்பந்த ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்பு தொகை, சால்வன்சி மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) | செலுத்த வேண்டிய தொகை | | ஒப்பந்ததாரர் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்திரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|---|
| | | | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) (Only for civil works) | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை (வரிகள் உட்பட) ரூபாயில் | | |
| 1. | பொத்தனூர் பேரூராட்சி அருகில் உள்ள சமுதாய நலக்கூட மேல்தளத்தில் டைனிங்ஹால் அமைத்தல். | 14.00 | 14000/- | 6240/- | Class IV | 180 நாட்கள் |
| 2. | 6வது வார்டு பொத்தனூர் பேரூராட்சிக்குட்பட்ட வாரச்சந்தையில் சுற்றுச்சுவர் மற்றும் மேற்கூரையுடன் கூடிய மேடை கட்டுதல். | 10.00 | 10000/- | 1,560 | Class IV | 180 நாட்கள் |
| 3. | 7வது வார்டு, கிழக்கு வண்ணாந்துரை மயானத்தில் எரிமேடை, சுற்றுசுவர் மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து கைப்பம்பு பொருத்துதல். | 5.00 | 5000/- | 780 | Class V | 180 நாட்கள் |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் அட்டவணையில் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளி படிவ விலையை முன்தினம் மாலை 5.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம். அதன்பிறகு வரும் விண்ணப்பங்களும் கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புகிறவர்கள் வேலையின் மதிப்பீட்டு தொகையில் 1 சதவீதம் தொகையை ஒப்பந்தபுள்ளி வைப்புத் தொகையாக ஒப்பந்த புள்ளி கொடுக்கும் தேதியன்று மதியம் 12.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். பெற்றுக் கொள்ளப்பட்ட செலுத்துச் சீட்டினை பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.
3. மேற்படி நிபந்தனைகளின்படி வரப்பெறாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட கால நேரத்திற்குப்பின் காலம் கடந்து வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி அழைப்பு நாள் எதிர்பாராதவிதமாக விடுமுறை நாளாக இருந்தால், அடுத்த அலுவலக நாளில், அதே நேரத்தில் திறக்கப்படும்.

(டபிள்ள)

5. அட்டவணை ஒப்பந்தப்புள்ளிகள் அடித்தல், திருத்தங்கள் இருந்தால் அந்த இடத்தில் ஒப்பந்ததாரரால் கையொப்பமிட்டு அனுப்பப்பட வேண்டும். அடித்தல், திருத்தங்கள் இருந்தால் அந்த இடத்தில் ஒப்பந்ததாரரால் சுருக்கொப்பம் இட்டு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்ததாரரின் கையொப்பம் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் செயல் அலுவலரால் நிராக்கரிக்கப்படும். உறையின் மேல் வேலையின் பெயரை குறிப்பிட வேண்டும்.

6. பொதுவாக குறைந்த வீத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

7. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவையாகும்.

8. ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் நிராகரிக்கவும் பேரூராட்சி பணிக்குழுவிற்கு உரிமை உண்டு.

9. வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற 3 தினங்களுக்குள் ஒவ்வொரு வேலைக்கும் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் சம்மந்தப்பட்ட வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் எம்.டி.எஸ்.எஸ் மற்றும் எஸ்.எஸ்ஆர்.டியின்படி திருப்திகரமாக செய்து முடிக்கும் பொருட்டு செயல் அலுவலரிடம் உரிய படிவத்தில் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டியது. தவறினால் வேலை உத்திரவு இரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

10. வேலை நடைபெறும் இடங்களில் திட்டத்தின் பெயர், வேலையின் பெயர், மதிப்பீட்டு செலவு, உத்திரவு வழங்கப்பட்ட நாள், வேலையை செய்து முடிக்கும் நாள் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் குறித்த அறிவிப்பு பலகை கண்டிப்பாக நடப்பட வேண்டும்.

11. வேலை நடைபெறும் முன்பும், வேலை நடைபெறும் பொழுதும் மற்றும் வேலை முடிவுற்ற பின்பும் புகைப்படங்கள் எடுத்துக் கொடுக்க வேண்டும்.

12. வேலையின் மதிப்பீட்டு தொகையில் 0.3 சதவீதம் தொகையினை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலசந்தா தொகையாக வங்கி வரைவு மூலம் வேலை உத்திரவு வழங்கப்பட்ட மூன்று நாட்களுக்குள் செயல் அலவலரிடம் வழங்க வேண்டும்.

13. வேலைக்கு பயன்படுத்தப்படும் பொருள்களுக்கு ஐ.எஸ்.ஐ தரச்சான்று பெற்று அனைத்தும் உதவி பொறியாளர் அவர்களின் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

14. இப்பணிகளில் தரைமட்டப்பணிகள் நடைபெறும் பொழுது குடிநீர் திட்ட பைப்லைன் மற்றும் தொலைதொடர்பு கேபிள்கள் பழுதுபட்டால் ஒப்பந்ததாரரே தனது சொந்த பொறுப்பில் பழுது நீக்கம் செய்து துறைக்கு ஒப்படைக்க வேண்டியது. நிர்வாகம் இதற்கு பொறுப்பேற்காது.

15. கட்டுமான வேலைகளுக்கு தேவைப்படும் தண்ணீரை ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அனுமதியன்றி பேரூராட்சி பொது குடிநீர் குழாய்களிலிருந்தோ அல்லது இதர குடிநீர் ஆதாரங்களிலிருந்தோ வேலைக்கு தண்ணீர் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் மொத்த வேலையின் மதிப்பில் 1 சதவீதம் தண்ணீர் பயன்படுத்திய செலவிற்காக பட்டியலில் பிடித்தம் செய்து கொள்ளப்படும்.

16. வேலையை செய்ய ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்பட்டுள்ள யாதொரு நபருக்கு அல்லது வேலைகளுக்கு அல்லது போக்குவரத்து வாகனத்திற்கு இவ்வேலையைச் செய்யும் பொழுது ஏற்படும் சேதாரம் அல்லது தேய்மானம் ஆகியவற்றிற்கு இப்பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பேற்காது.

17. ஒப்பந்தாரருக்கு தொழில்நுட்ப தகுதி இல்லாதிருந்தால் LCE/DCE/LCS படிப்பு முடித்த நபர் அல்லது ஓய்வு பெற்ற இளநிலை பொறியாளர் அல்லது LCS (Civil) போன்ற தகுதியுள்ள நபரை தொழில்நுட்ப உதவியாளராக இவ்வேலை நடைபெறும் இடத்தில் கண்டிப்பாக நியமிக்க வேண்டும். இவ்வாறு இளநிலை பொறியாளர் அவரது அதிகாரம் பெற்றவரால், செயல் அலுவலரால் அல்லது வேறு அரசு உயர் அதிகாரிகளின் ஆய்வின் போது மேற்காணும் தகுதி உள்ள தொழில் நுட்ப உதவியாளர் இல்லாமல் வேலை நடைபெறுவது கண்டறியப்பட்டால் மறு அறிவிப்பின்றி ஒப்பந்ததாரருக்கு அபராதமாக ரூ.1000/- விதிக்கப்படும்.

18. பேரூராட்சியின் இளநிலை / உதவிபொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் அல்லது சம்மந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளால் வேலை நடைபெறுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும், அளவுகள், மேலளவுகள் எடுக்கவும் உரிமையுண்டு.

19. பேரூராட்சியின் இளநிலை / உதவி பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் அல்லது சம்மந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளின் கட்டளைப்படி வேலையினை M.D.S.S.-ன்படி (Madras Detailed standard Specification) திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும்.

20. வேலை முடிவுற்ற பின் சம்பந்தப்பட்ட பொறியாளரால் அளவு மேலளவு எடுத்து சரிபார்த்து தயாரித்து கொடுக்கப்படும் பட்டியலில் கண்டுள்ள தொகைக்கு உரிய பிடித்தங்கள் செய்து கொண்டு மீதமுள்ள தொகை காசோலை மூலம் நியமன காலக்கெடுவிற்குள் வழங்கப்படும். திட்டப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொகை கிடைத்த பின்புதான் தொகை வழங்கப்படும்.

21. மொத்த வேலையின் மதிப்பில் வருமான வரி 2 சதவீதம் அதற்கு மேல் வரி 12 சதவீதம் கல்வி வரி 2 சதவீதம் மற்றும் விற்பனை வரி 2 சதவீதம் அதற்கு மேல்வரி 15 சதவீதம் ஆகியவைகள் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு சம்மந்தப்பட்ட தலைப்புகளில் செலுத்தப்படும்.

22. இப்பணிகளுக்காக முன்பணங்கள் மற்றும் கட்டுமானப் பொருள்கள் ஏதும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட மாட்டாது.

23. பின்வரும் காலங்களில் ஒப்பந்தப்புள்ளிகளின்மீது தணிக்கை மறுப்புகளையோ, அல்லது உயர் அதிகாரிகளின் கட்டளைப்படியோ தொகை பிடித்தம் செய்ய வேண்டி இருப்பின், ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி இட்டு வைப்புத் தொகைகளிலிருந்து அத்தொகை சரி செய்து கொள்ளப்படும். வைப்புத் தொகை கணக்கிலுள்ள தொகைக்கு பிடித்தங்கள் இருப்பின், செயல் அலுவலரால் தெரிவிக்கப்படும் காலஅளவிற்குள் ரொக்கமாக பேரூராட்சியில் செலுத்த ஒப்பந்ததரார்கள் கட்டுப்பட்டவர்கள்.

24. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்ட பணிகளை உள் ஒப்பந்தத்திற்கு விடக் கூடாது.

25. வேலை முடிவுற்ற பின் ஒப்பந்ததாரர்களால் வேலை நடைபெற்ற இடங்களில் விட்டுச் செல்லப்படும் பொருள்களை ஒரு மாத காலத்திற்குள் அப்புறப்படுத்திக் கொள்ளவில்லை எனில் அவை பேரூராட்சியல் கைப்பற்றிக் கொள்ளப்படும்.

26. இந்நிபந்தனைகளுக்கு உட்படாமலும் உரிய காலக் கெடுவிற்குள் வேலையை முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு செயல் அலுவலர் தமக்கு தகுதியாய் தோன்றும் தொகையினை அபராதமாக விதித்து வசூலிக்க உரிமையுண்டு.

27. மேற்குறிப்பிட்ட கால அளவுக்குள் பணியை முடிக்காத ஒப்பந்ததாரர் அடுத்தபடியாக வழங்க இருக்கும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள முற்றிலும் தகுதியற்றவர் ஆவார்.

28. உசிதம் போல் ஒப்பந்தப்புள்ளி தேதியை ஒத்திப்போடவோ அல்லது நிறுத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

29. மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே மேற்படி வேலைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம்.

30. ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தமான விவரங்களை இணை தளத்தில் www.tenders.tn.gov.in, www.townpanchayats.tn.gov.in/tender என்ற வலைதள முகவரியில் பார்த்துக் கொள்ள வேண்டியது.

31. இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

22/6/10

செயல் அலுவலர்,
பொத்தனூர் பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

22/6/10

பெறுதல்.

1. பதிவு பெற்ற ஒப்பந்ததரார்கள்
   பொத்தனூர் பேரூராட்சி,,
   நாமக்கல் மாவட்டம்.

2. அலுவலக விளம்பர பலகைக்கு

<u>நகல்</u> :- இளநிலை பொறியாளர், பேரூராட்சி (வேலூர் தொகுப்பு) அவர்களுக்கு தகவலுக்காக.
உதவி செயற் பொறியாளர் பேரூராட்சிகள் நாமக்கல் அவர்களுக்கு தகவலுக்காக.
உதவி இயக்குநர் பேரூராட்சிகள் சேலம் மண்டலம் சேலம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.